* 49 வினா—திரு. சி. இராமநாதன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அறந்தாங்கி வட்டத்தில் வெள்ளாற்றின் குறுக்கே கீரனூர் (Keeranoor) அருகில் அணை ஒன்றினை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. என். கிட்டப்பா: தலைவரவர்களே, இந்தத் திட்டம் எப்போது நிறைவேற்றப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இத்திட்டங்களுக்கான ஆய்வுகள் முடிந்துவிட்டன. மதிப்பீட்டிற்காக வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்டு பிறகு திட்டம் நிறைவேற்றப்படும்.

Bypass road near Koilpatti

* 50 Q.—THIRU K. P. KANDASAMY: **Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal with the Government to lay a bypass road, west of Koilpatti Railway Station?**

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஆம்.

திரு. கே. பி. கந்தசாமி: திட்டத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதையும் இது எப்போது நிறைவேற்றப்படும் என்பதையும் அமைச்சர் அவர்கள் குறிப்பிடுவார்களா?

மாண்புமிகு திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா: திட்டத்தின் மதிப்பு ரூபாய் 21 லட்சம். இதற்கான நிலங்களை ஆர்ஜிதம் செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. விவசாயத் துறையிலிருந்து கொஞ்சம் நிலங்களை ஆர்ஜிதம் செய்யவேண்டியிருக்கிறது. இது முடிந்தவுடன் ஆவன செய்யப்படும்.

சிறு துறைமுகங்கள்

* 51 வினா—திரு. கா. காளிமுத்து: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முகவை மாவட்டத்திலுள்ள 'தொண்டி' யைத் துறைமுகமாகச் சீர்திருத்தம் செய்யும் திட்டம் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் எனில், எப்போது, அத்திட்டத்தின் ஆரம்ப வேலைகள் தொடங்கும்?

1972 ஆகஸ்ட் 10]

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் —(அ) இல்லே.

(இ) இவ்வினவுக்கு இடமில்லே.

* 52 வின—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா—

குலசேகரப்பட்டணம் துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய அரசு மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: குலசேகரப்பட்டிணம் துறை முகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டம் இல்லே.

தமிழ்நாடு நிலவள வங்கி

* 53 வின—திரு. கே. ஏ. வகாப்: மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னேயில் உள்ள தமிழ்நாடு நிலவள வங்கியில் தற்போது எத்தனே இயக்குநர்கள் (Directors) இருக்கிறர்கள்?

(இ) இவர்களில் அரசு எத்தனே பேரை நியமனம் செய்துள்ளது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: (அ) தற்போது இருக்கின்ற இயக்குநர்களின் எண்ணிக்கை 56.

(இ) ஒருவர்.

திரு. கே. ஏ. வகாப்: தலேவரவர்களே, 56 இயக்குநர்கள் என்பது 56 சிற்றரசர்களேப்போல் இருக்கின்றது. ஒரு நிர்வாகத்தின் கீழ் இது போன்று 56 இயக்குநர்கள் தேவைதான என்பதை அரசு ஆலோசித்து இந்த இயக்குநர்களின் எண்ணிக்கையைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: 1967-க்கு முன்பு இந்த வங்கி களில் அரைக் கோடி ரூபாய்க்கு மேல் வரவு-செலவு இருக்குமானல் அதற்கு ஒரு இயக்குநர் என்ற அளவில் இயக்குநர்கள் நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இப்போது வரவு-செலவு ரூபாய் 2 கோடிக்கு இருந்தால் தான் ஒரு இயக்குநர் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. எனவே எண்ணிக்கை குறையுமே தவிர ஏருது.

திரு. ஏ. சுப்பிரமணியம்: தலேவர் அவர்களே, அரசாங்கம் எத்தனே இயக்குநர்களே நியமித்திருக்கிறது? அவர்கள் எந்தத்தகுதி அடிப்படையில் நியமிக்கப்பட்டார்கள் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்கள்?